செய்தி வெளியீடு எண்: 08 நாள்: 08.09.2020

**தேனி மாவட்டம்**
**மதுரை - போடிநாயக்கனூர் அகல இரயில் பாதை திட்டத்தினை விரைவாக செயல்படுத்தப்படுவது தொடர்பாக தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில்**
**தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ப.ரவீந்திரநாத்குமார் அவர்கள் பங்கேற்பு:-**
******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (08.09.2020) மதுரை - போடிநாயக்கனூர் அகல இரயில் பாதை திட்டத்தினை விரைவாக செயல்படுத்தப்படுவது தொடர்பாக இந்திய இரயில்வே துறை, வனத்துறை, மின்சாரத்துறை மற்றும் வருவாய்த்துறை ஆகிய துறைகள் சார்ந்த முதன்மை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ப.ரவீந்திரநாத்குமார் அவர்கள் கலந்து கொண்டார்.

தேனி மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மதுரை - போடிநாயக்கனூர் அகல இரயில் பாதை திட்டம் தொடர்பான பணி விரைவாக நடைபெற்று வருகிறது. இத்திட்டம் கடந்த 2009-ல் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நிதிநிலைவிடுவிப்பின் அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், தற்சமயம் கொரோனா நோய்த்தொற்றின் காரணமாகவும், நிதிநிலையின் அடிப்படையிலும் பணிகள் நடைபெற்றுவருவதில் ஏற்பட்டுள்ள இடையூறுகளை களைவதற்கு இந்திய இரயில்வே துறை, வனத்துறை, மின்சாரத்துறை மற்றும் வருவாய்த்துறை ஆகிய துறைகள் சார்ந்த முதன்மை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் இன்றைய தினம் நடைபெற்றது.

தற்சமயம், அகல இரயில் பாதை தொடர்ந்து அமைப்பதற்கு இடையூறாக இருக்க கூடிய அம்சங்கள் ஒவ்வொன்றாக சம்பந்தப்பட்ட துறை சார்ந்த முதன்மை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் கேட்டறிந்தார். வனத்துறையின் மூலம் தேனி முதல் போடிநாயக்கனூர் வரையிலான பகுதியில் குறிப்பிட்ட மரங்கள் அகற்றும் பணி மற்றும் மின்சாரத்துறையின் வாயிலாக மதுரை முதல் உசிலம்பட்டி வரையிலும், உசிலம்பட்டி முதல் போடிநாயக்கனூர் வரையிலும் உயர் மின்னழுத்த கோபுரங்கள் மாற்றி அமைக்கும் பணி, வருவாய்த்துறையின் வாயிலாக இரயில் பாதைக்கு அருகில் வசித்துவரும் பொதுமக்களுக்கு குடிசைமாற்று வாரியத்தின் மூலம், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய வீடுகள் கட்டி வழங்குதல் மற்றும் ஆக்கரமிப்பு பகுதிகளை அகற்றுதல், சுரங்கப்பாதை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் தொடர்பாகவும் மற்றும் தேவையான நிதிநிலைகள் குறித்தும், துறைசார்ந்த அலுவலர்கள் விரிவாக எடுத்துரைத்தனர்.

தேனி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு முன்பாகவே அவர்களின் தேவைகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் மக்களவையில் எடுத்துரைத்துக்கப்பட்டு வருகிறது. அதன்படி மதுரை-போடிநாயக்கனூர் அகல இரயில் பாதை திட்டத்தினை விரைவாக செயல்படுத்தப்படுத்துவதற்கும் தேவையான நிதிநிலை தொடர்பாக மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களிடம் எடுத்துரைத்து நிதிகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எடுத்துரைத்தார்.

எனவே, துறையைச் சார்ந்த அலுவலர்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் அகல இரயில் பாதை திட்டப்பணிகளை ஒருங்கிணைந்து செயல்பட்டு, துரிதப்படுத்தி, விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் தேனி பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், தேனி மாவட்ட வன அலுவலர் எஸ்.கௌதம் இ.வ.ப., மேகமலை வனஉயிரின காப்பாளர் போஸ்லின் சச்சின் துக்காரம் இ.வ.ப., மதுரை ரயில்வே உதவிகோட்ட மேலாளர் லலித்குமார் மன்சுஹானி, மதுரை துணை தலைமை பொறியாளர்(கட்டுமான பிரிவு) வி.சூரியமூர்த்தி, மதுரை செயற்பொறியாளர் (மின்சாரம்) கட்டுமானபிரிவு எம்.சுந்தரஜெயக்குமார் மற்றும் மதுரை மின்சாரத்துறை மேற்பார்வை செயற்பொறியாளர் ப்ரிதாபத்மினி, தேனி மேற்பார்வை பொறியாளர் உமாதேவி, மதுரை செயற்பொறியாளர் அன்புமாறன் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இரா.ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**